மூலக்காட்டுப் பள்ளத்திற்குக் கரை அமைப்பு

*172 வினு—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) மேட்டூர் தாலுக்கா, செட்டியூர் கண்ணும்பூச்சி கிராமம், மூலக் காட்டுப் பள்ளத்தில் 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கரையமைப்புத் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், இது போன்று சிறு சிறு திட்டங்கள், பல பெரிய திட்டங்கள் தேங்கி நிற்பதற்குக் காரணம் என்ன ? சீப் இன்ஜினீயர் அதிகாரத்தின் கீழ் எவ்வளவு ரூபாய் வரையில் உள்ள திட்டங்களுக்கு அனுமதி அளிக்கலாம் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைமைப் பொறியாளர் அதிகாரத்தின் கீழ் ரூ. 1 லட்சம் வரை அனுமதி அளிக்கலாம். இத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் நிலங்கள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருக்கும் திட்டங்களில் சேர்ந்து விடுவதால் இத் திட்டம் கைவிடப்பட்டது.

தரங்கம்பாடிப் பகுதியில் கடலரிப்பு

* 173 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுக்கா, தரங்கம்பாடி கோட்டைப் பகுதியில் கடலரிப்பைத் தடுத்து நிறுத்திட அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தரங்கம்பாடி கோட்டைப் பகுதியில் கடலரிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

கதர் இயக்குநர் பதவி

* 174 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கதர் இயக்குநராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தமிழக கதர் வாரியத்தில் செயலாளர் பதவியையும், இயக்குநர் பதவியையும் ஒன்று சேர்த்து தலைமை நிர்வாக அதிகாரி (Chief Executive Officer) என்ற பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, இந்தக் கதர் வாரியத்திற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தான் நியமிக்க வேண்டுமா? கதர் துறையில் மிகவும் அனுபவமும் ஆர்வமும் இருக்கக்கூடிய ஒருவரை, அதில் சம்பந்தப்பட்டவரை இதில் நியமிக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதையெல்லாம் தீர ஆலோசித்த பிறகுதான் ஐ.ஏ.எஸ். ஆபீசர் நியமிக்க முடிவு செய்யப்பட்டது.

சின்னதாராபுரம் கதர் கிராமத் தொழில் பிரிவு

*175 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதி சின்னதாராபுரம் கதர் கூட்டுறவு குடிசை வாரியத்திலிருந்து விலகிவிட்ட நெசவாளிகளுக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகைகள் காலம் தாழ்ந்துவிட்டதென்ற காரணம் காட்டி கொடுக்க மறுக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு உரிய பதில் கிடைக்கவே காலதாமதமாகிவிட்டது. அங்கேயுள்ள நெசவாளர்களுக்கு சேர வேண்டிய பணம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் நெசவாளர்களிடமிருந்து வாரியத்திற்குச் சேர வேண்டிய பணத்தை கெடுபிடியாக வசூலித்து இருக்கிறார்கள். ஆகவே, அரசு அவர்களுக்குச் சேர வேண்டிய பணத்தைத் தருவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, நேற்றுவரையில் பரிசீலித்ததில் யாரும் அவர்களுக்குச் சேரவேண்டிய பணத்திற்கு விண்ணப்பித்ததாகத் தெரியவில்லை. அப்படி யாராவது செய்தால் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி தீர்மானமே போட்டு அனுப்பியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் *வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுறை உறுப்பினரால் சரிபா[illegible]ப்பட்டது என்பதைக் குறிக்கும்.]